# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# அரையாண்டுத் தேர்வு

## 2020–2021

## தமிழ்மொழி

## வளர் தமிழ் 3

சுட்டெண்:............................................................ நேரம்: 90 மணித்துளிகள்

www.tamitedc.com

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

(எ - கா)

எமது தேசிய மலர் கார்த்திகைப்பூ .

( தாமரைப்பூ, கார்த்திகைப்பூ, மல்லிகைப்பூ )

1. காலைக்காட்சி என்பதைப் பிரித்தால் ____________ .

( காலைக் +காட்சி, காலை + க்காட்சி, காலை + காட்சி )

2. மங்கையின் காற்சலங்கை ________________ என்று ஒலித்தது.

( கீச்கீச், கலீர்கலீர், சலசல )

3. 70 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ________________

( எழுபது, எலுவது, எளுபது )

4. வானவில்லில் ________________ நிறங்கள் உள்ளன?

( எங்கே, எப்படி, எத்தனை )

5. விளைந்த நெல் உழவரால் அறுவடை ________________ .

( செய்யப்பட்டது, செய்தான், செய்தார்கள் )

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

6. காகம் கரையும். அது போல வாத்து ______________ .

( கூவும், கத்தும், பேசும் )

7. காலை என்பதன் எதிர்ச்சொல் ________________ .

( இரவு, பகல், மாலை )

8. பாவலன் பாடலை நன்றாகப் __________________ முடித்தான்.

( எடுத்து, பாடி, ஓடி )

9. மேசையில் பழம் இருக்கிறது. _______________ அதை எடுத்து உண்.

( நாங்கள், நீங்கள், நீ )

10. தூயவள் நேற்று சட்டை வாங்கினாள் . தூயவள் நாளை சட்டை ______________ .

( வாங்குவாள், வாங்குகின்றாள், வாங்குவான் )

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

11. பாண்டியரது கொடி ___________________ .

( புலிக்கொடி, விற்கொடி, மீன்கொடி )

12. ___________________ இலையில் உணவு உண்பர்.

( மா , பலா , வாழை )

TEDC

13. அதியர்மான் __________________ ஆண்டான்.

( நல்லூரை, தகடூரை, தஞ்சாவூரை )

14. ______________ அடங்காப்பற்று என அழைக்கப்பட்டது.

( வன்னி, யாழ்ப்பாணம், கந்தரோடை )

15. நீருந்துகளில் மிகப்பெரியது ______________ .

( கப்பல், வள்ளம், படகு )

16. பிரான்சு நாட்டின் தலைநகரம் ______________ .

( லண்டன், பாரிசு, கொழும்பு )

17. சிலப்பதிகாரத்தை எழுதியவர் ______________ .

( இளங்கோவடிகள், ஔவையார், திருவள்ளுவர் )

18. கோடைகாலத்திற்கு அடுத்துவரும் காலம் ______________ .

( பனிகாலம், இலைஉதிர்காலம், இலைதளிர்காலம்)

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

19. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல் ______________ .

( சிற்றுந்து, பேருந்து, சிலந்தி )

20. பண்டாரவன்னியன் ______________ போரிட்டான் .

( ஒல்லாந்தருடன், ஆங்கிலேயருடன், போர்த்துக்கேயருடன் )

புள்ளிகள் 20

2) கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| அடித்து | கசப்பாக | ~~பூவும்பிஞ்சும்~~ |
| கூறுகிறது | தடதட | அழைப்பர் |

எ - கா

மாமரத்தில் பூவும்பிஞ்சும் காணப்பட்டன.

1. சிறுவர்கள் பூங்காவில் பந்து __________ விளையாடினர்.

2. பாகற்காய் __________ இருக்கும்.

3. சிலப்பதிகாரம் தமிழரது பண்பாட்டைக் __________ .

4. கள்வன் மாடிப்படிகளில் __________ என ஓடினான்.

5. திருக்குறளைப் பொதுமறை என்றும் __________ .

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

புள்ளிகள் 10

3) மிகப்பொருத்தமான முடிக்கும் சொல்லை எழுதிச் சொல்லியங்களை நிறைவு செய்க.

(எ - கா)

வண்டு பூவில் தேன் <u>குடித்தது</u> .

1. அப்பா கடலில் மீன் ____________________ .

2. வாத்துகள் குஞ்சுகளுடன் தண்ணீரில்

____________________ .

3. சிறுமி தொலைக்காட்சியில் நாடகம் ____________________ .

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

4. தென்னை உயரமாக ____________________ .

5. நேற்று நல்ல மழை ____________________ .

TEDC

புள்ளிகள் 10

**4) கீறிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை எழுதுக.**

(எ - கா)

வாழை நாரில் ____பூமாலை____ கட்டுவர்.

( பூமாலை, பூமாளை )

1. ____________ தமிழரின் கொண்டாட்டம்.

( தைப்பொங்கல், தைப்பொங்கள் )

2. மாணவன் ஆசிரியருக்கு ____________ கூறினான்.

( வணக்கம், வனக்கம் )

3. தமிழீழத்தின் தேசிய ____________ வாகை.

( மரம், மறம் )

4. ஆடிப்பிறப்பன்று ஆடிக் ____________ காய்ச்சுவர்.

( கூள், கூழ் )

5. எலி ____________ வாழும்.

( வலையில், வளையில் )

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

புள்ளிகள் 5

5) தரப்பட்ட வினாக்களுக்குரிய விடைகளைக் கட்டங்களிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செ | வ் | வ | ர | த் | தை |
| | யா | தி | ங் | க | ள் |
| | னை | | கு | யி | ல் |
| | | | ப் | ப | ம் |
| ம | ண | ல் | வீ | டு | |
| அ | ஞ் | ச | ல | க | ம் |

எ - கா

தும்பிக்கை உள்ள விலங்கு ___யானை___ .

1. கிழமைகளில் ஒன்று ____________ .

2. சிவப்பு நிறமுடைய பூ ____________ .

3. ‘கூ கூ’ என்று கூவும் பறவை ____________ .

4. சிறுவர்கள் கட்டி விளையாடுவது ____________ .

5. அஞ்சல்கள் அனுப்பும் இடம் ____________ .

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

புள்ளிகள்10

6) **மிகப்பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| உண்பதற்கு | கறி | இனிமையாக |
| ~~கிளைகள்~~ | இனங்கள் | சீப்புச்சீப்பாக |

வாழை மிகவும் பயனுள்ள மரம். இதற்குக் <u>கிளைகள்</u>

இல்லை. வாழையில் பல ______________ உள்ளன.

வாழைக்குலையில் காய்கள் ______________ இருக்கும்.

வாழைப்பூ, வாழைக்காய் என்பன ______________

சமைப்பதற்கு உதவுகின்றன. வாழைப்பழம் ______________

மிகவும் ______________ இருக்கும். வாழைப்பழம்

முக்கனிகளில் ஒன்றாகும்.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

புள்ளிகள் 10

7) **ஒரு சொல்லில் விடை எழுதுக.**

**எ - கா**

பாரிசு நகரத்தினூடாக ஓடும் ஆற்றின் பெயர் என்ன?

சென்

1. வன்னியை ஆண்ட மன்னன் யார்?

2. தமிழரது வீரத்தைக் கூறும் நூல் எது?

3. அதியர்மான் ஏன் காட்டிற்குச் சென்றான்?

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

4. சிறந்த பெண் புலவர் யார்?

5. வாழை எத்தனைமுறை குலை தரும்?

TEDC

புள்ளிகள் 10

8) **பந்தியை வாசித்து ; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

ஒரு குளக்கரையில் முகிலனும் இனியாவும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் குளத்தில் ஒரு தவளையைக் கண்டார்கள். அப்பொழுது முகிலன் தவளைக்குக் கல்லால் எறிந்தான். தவளை நோவினால் துன்பப்பட்டது. அதைக் கண்ட இனியா தவளைக்கு கல் எறிய வேண்டாம் எனக் கூறினாள். நாம் உயிர்களுக்குத் துன்பம் செய்யக்கூடாது. உயிர்களிடத்தில் அன்பாய் இருக்க வேண்டும்.

**எ - கா**

முகிலனும் இனியாவும் எங்கே விளையாடிக் கொண்டிருந்தார்கள்?

முகிலனும் இனியாவும் குளக்கரையில் விளையாடிக் கொண்டிருந்தார்கள் .

1. சிறுவர்கள் குளத்தில் எதைக் கண்டார்கள்?

______________________________ .

2. தவளைக்குக் கல்லால் எறிந்தவன் யார்?

______________________________ .

3. எது நோவினால் துன்பப்பட்டது?

______________________________ .

4. நாம் உயிர்களுக்கு என்ன செய்யக் கூடாது?

______________________________ .


5. உயிர்களிடத்தில் எப்படி இருக்க வேண்டும்?

______________________________ .

புள்ளிகள் 10

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை TEDC

9) **படத்தைப் பார்த்து ஐந்து சொல்லியங்கள் எழுதுக.**



1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

புள்ளிகள் 15

தமிழர் கல்வி
TEDC